2014 டிசம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாய்ப்பு கொடுத்துவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) பிறகு பேசும்போது சொல்லிக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு

பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. அறிவிப்புகள்

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இரண்டாம்), 2014–2015, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2014-2015 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்களுக்கான மானியக்